**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 130/2025**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 17.07.2025.**

| | |
|---|---|
| **Name : மாதேஷ்வரி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) நான் மதியழகனுக்கு முதல் மனைவி என்றால் ஆமாம். எங்களுக்கு விவாகரத்து இல்லாமல் பிரிந்து எத்தனை வருடம் ஆனது என்றால் 20 வருடமாகிறது. என்னை திருமணம் செய்து விவாகரத்து ஆகாமல் வேறு பெண்ணை திருமணம் செய்தார் என்றால் ஆமாம். இரண்டாவது மனைவிக்கு பிறந்தது தான் சாருலதா என்றால் ஆமாம். நான் மதியழகன் வீட்டிற்கு வந்ததே இல்லை என்றால் ஆமாம். கடைசியாக எப்போது எப்படி சேர்ந்தேன் என்றால் நானாகவே கடந்த 7 மாதத்திற்கு முன்பு வந்தேன்.

2) நான் வந்து சேர்ந்த பின்னர் தான் 2ம் மனைவி இறந்தார் என்றால் நான் வருவதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பு இறந்தார். குணவதி எப்படி இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. எங்கு இறந்தார் என்றால் தாரமங்கலத்தில் உள்ள அவர் தாயார் வீட்டில் இறந்தார். அந்த இறப்பு நிகழ்ச்சிக்கு நான் செல்லவில்லை என்றால் ஆமாம். குணவதியுடன் கள்ள உறவு கொண்டு என்னை துரத்திவிட்டார் என்றும் அதனால் நான் பிரிந்து சென்றேன் என்றால் இல்லை.

3) எனக்கும் என் கணவருக்கும் ஆதார் கார்டு, ரேஷன் கார்டு உள்ளதா என்றால் ரேஷன் கார்டு இல்லை. என்னுடைய ஆதார் கார்டில் என் கணவர் பெயர்

உள்ளதா என்றால் என் தகப்பனார் பெயர் தான் உள்ளது. சாருலதா தற்போது எந்த பள்ளியில் என்ன படிக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் வீடு அட்டை வீடாகும். எனது வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் தள்ளி 1ம் எதிரி வீடு உள்ளது என்றால் ஒரு பர்லாங் தூரம் இருக்கும்.

4) பழனி வீடு மற்றும் கம்மம்பட்டி பூசாரி வீடு, ஆண்டியப்பன் மற்றும் காளியப்பன் தோட்டம் என் வீட்டை சுற்றி அமைந்துள்ளது என்றால் ஆமாம். எதிரிகள் மூவரும் மதியழகன் வீட்டாரோடு நல்ல சமூகமான முறையில் இருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாருலதாவின் வயது தங்கவேல் மகள் வயதுடன் சேர்ந்து ஒத்தாற் போல் உள்ளது என்றால் அந்த தங்கவேல் மகள் பற்றி எனக்கு தெரியாது. இருவருடைய வயது விவரம் எனக்கு தெரியாது.

5) 1ம் எதிரியின் மகளுக்கு சீர் வைத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த சீரில் சாருலதா என்பவர் மெஹந்தி வைத்து அலங்காரம் செய்தார் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள இரண்டு பெண் மகளும் சாருலதா மற்றும் 1ம் எதிரியின் மகளும் உள்ளார்கள் என்றால் ஆமாம். மற்றொரு புகைப்படத்தில் இரண்டு பெண் மகளும் சாருலதா மற்றும் 1ம் எதிரியின் மகளும் குணவதியும் உள்ளார்கள் என்றால் குணவதியை எனக்கு தெரியாது. மற்றொரு புகைப்படத்தில் யார் நலுங்கு வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

6) சாருலதாவின் வயது தான் 1ம் எதிரியின் மகளுக்கும் இருக்கும் என்றும் சாருலதாவையும் மகள் போன்று தான் 1ம் எதிரி பார்த்து வந்தாற் என்றும் சமூகமாக இரு குடும்பத்தாரும் இருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரி எங்கு சென்று வந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் எதிரி பொட்டனேரியில் உள்ள ஒரு சீர் நிகழ்ச்சிக்கு சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7) குணவதி இறந்த தேதி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. குணவதியுடன் மதியழகன் என்பவருடன் என்னை அழைத்து வருவது சம்மந்தமாக கருத்து வேறுபாடு ஏற்பட்டு குணவதி அவருடைய தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் அவ்வாறு இல்லை. ஆஜர் எதிரிகள் குணவதிக்கு அறிவுரை கூறி

அ.சா.5யை குணவதியை அழைத்து வர சொன்னார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதனால் குணவதி மணம் உடைந்து நான் வந்து சேர்ந்து வாழ்ந்துவிடுவேனா என்று நினைத்து குணவதி தான் தான் முதல் மனைவி என்றும் அந்த மனவேதனையில் குணவதி இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது.

8) அ.சா.5 எங்கு 1ம் எதிரி மீது எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாருலதா கொடுத்த புகாரின் பேரில் என்னை யாராவது அழைத்தார்களா என்றால் இல்லை. தற்போது கூட சாருலதா தாயாக ஏற்கவில்லை என்றால் ஏற்றுக் கொண்டார்கள். நான் பொய்யாக ஏற்றுக் கொண்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாருலதா என்பவர் தன் தாயார் இறந்தது நான் வந்ததால் தான் நினைத்து 2ம் எதிரி மற்றும் அவரது மகளை அம்மாவாகவும், சகோதரியாகவும் நினைத்து வாழ்ந்து வருகிறார் என்றால் அது அவர்கள் பிரச்சனையாகும்.

9) எதிரிகள் வீட்டிற்குள் வந்து திட்டினார்கள் என்றால் ஆமாம். நான் மருத்துவமனையில் நான்கு நாட்கள் சிகிச்சையிலிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனரா என்றால் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். 1ம் எதிரி வீட்டிலிருந்து வெளியே இழுத்து வந்து தாக்கியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

10) எட்டி உதைத்து வீட்டிற்கு வெளியே இழுத்து குரவலையை நசுக்கியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். என்னை வயிற்றின் மீது 1ம் எதிரி எட்டி உதைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். 1 முதல் 3 எதிரிகள் மற்றும் ஒரு அலமேலு அடித்து காயம் ஏற்படுத்தியதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொன்ன எதையும் போலீசார் விசாரிக்கும் போது சொல்லவில்லை என்றால் அவ்வாறு இல்லை.

11) இந்த சம்பவத்தை வேறு யாரும் நேரடியாக பார்த்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கலைக்கொல்லி மருந்து

குடித்து தான் குணவதி இறந்ததாக என் கணவர் சொல்லி தான் தெரியும் என்றால் ஆமாம். எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். என் கணவரும் சாருலதாவும் சொல்லி தான் தெரியும்.

12) 1ம் எதிரி கடந்த 24ம் தேதி 2025ம் வருடத்தில் மாலை 4 மணிக்கு கெட்ட வார்த்தையை குறிப்பிட்டு சொல்லி திட்டியதாகவும், அடித்து தாக்கிய விவரத்தை போலீசார் விசாரிக்கும் போது சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். என் கணவரை தாக்கிய போது நாங்கள் எங்கிருந்தோம் என்றால் மூவரும் வீட்டுக்குள் தான் இருந்தோம்.

13) போலீசார் விசாரிக்கும் போது வீட்டிற்குள் இருந்த போது தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். இந்த 7 மாதத்தில் நான், என் கணவர், என் மகள் சாருலதா ஆகிய மூவரும் எதிரிகள் குடும்பத்துடன் பேசவில்லை, அவர்கள் வீட்டிற்கும் செல்லவில்லை என்றால் ஆமாம். 2ம் எதிரிக்கு உடல் சுகம் குறைவு என்ற விவரம் எனக்கு தெரியாது.

14) எந்த ஆயுதத்தை பயன்படுத்தி தாக்கினார்கள் என்று போலீசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் தடியை வைத்து தாக்கியதாக சொல்லியுள்ளேன். போலீசார் அவர்களிடம் தடியை கொடுத்துள்ளேனா என்றால் அது சம்பவயிடத்திலேயே கிடந்தது. என்னை மருத்துவமனையில் விசாரணை செய்த பிறகு போலீசார் என்னை தற்போது வரை விசாரிக்கவில்லை என்றால் ஆமாம்.

15) மருத்துவமனையில் விசாரித்து யார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் பெயர் தெரியவில்லை ஆனால் ஒரு போலீசார் விசாரித்தார். நான் கையொப்பம் ஏதாவது செய்தேனா என்றால் இல்லை. மருத்துவமனையில் இருந்த போது 1 மற்றும் 2 எதிரிகள் மருத்துவமனையில் இருந்தார்களா என்றால் ஆமாம். 1ம் எதிரிக்கு எவ்வளவு விவசாய நிலம் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. ஆனால் விவசாய நிலம் உள்ளது.

16) எதற்காக எங்கள் வீட்டை தாண்டி செல்வார்கள் என்றால் மாடுகளை அழைத்து செல்வார்கள். 7 மாதத்தில் 2ம் எதிரியின் மகளும், சாருலதாவும் ஒன்றாக பள்ளிக்கு செல்வார்கள் என்றால் நான் பார்த்ததில்லை. நான் என்

கணவர் வீட்டிற்கு வந்த போது எதிரிகளின் செயல்கள் குறித்து கணவரும், சாருலதாவும் சொன்னதால் நான் அவர்கள் வீட்டிற்கு ஏன் செல்லவில்லை என்ற விவரத்தை கேட்கவில்லை. நான், என் கணவர், சாருலதா மூவரும் 1ம் எதிரியை அடித்து 2.2.2025ம் தேதி மாலை 4 மணிக்கு காயம் ஏற்படுத்தினோம் என்றும் அது சம்மந்தமாக வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. இந்த நீதிமன்றத்தில் C.C.No.150/2025 என்ற எண்ணில் எங்கள் மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம்.

17) எனது கணவர் 2ம் எதிரியுடன் சாருலதாவிடம் தாயாக பழக சொன்னாரா என்றால் எனக்கு தெரியாது. அது பற்றி பேச தான் சொல்லி என்னிடம் அணுகினார்கள் என்றும் நான் சொல்வது போல் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு கேட்கும் போது வீட்டிற்கு வெளியே வந்த போது எதிரிகளை நாங்கள் அடித்துவிட்டோம் என்றால் இல்லை.

18) விஷயத்தை கேட்க வந்தார்களா என்றால் ஏன் வழக்கு கொடுத்தீர்கள் என்று கேட்க வந்தார்கள். எனது கணவர் 2ம் எதிரியுடன் சாருலதாவிடம் தாயாக பழக சொன்ன பின்னர் வேறு பிரச்சனையை மனதில் வைத்து அதனை நான் மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 எதிரிகளை நான் மற்றும் அ.சா.5 தாக்கிவிட்டு செல்லும் போது கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்துக்கொண்டு பொய்யாக மருத்துவமனையில் சேர்ந்து பொய் வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் அவ்வாறு இல்லை.

19) சாருலதாவிற்கு எந்த காயமும் இல்லை என்றும் ஊமக்காயம் உள்ளதாக கற்பனையாக சொல்லி மருத்துவமனையில் சேர்ந்தார் என்றால் அவ்வாறு இல்லை. அதனால் தான் மருத்துவரிடம் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளுக்கு எதிராக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. காயம் குறித்து மருத்துவரிடமும், முதல் விசாரணையிலும், போலீசார் விசாரணையிலும் மாறி மாறி சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை.

20) சேலம் சமூக நலத்துறையிலிருந்து சம்பவம் நடப்பதற்கு முன்பாக எத்தனை நாட்களுக்கு முன்பு விசாரித்தார்கள் என்றால் நான்கு நாட்களுக்கு முன்பு

விசாரித்தார்கள். அக்கம்பக்கம் உள்ளவர்களை விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகளை விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. குணவதி இறந்தது குறித்து புகார் கொடுக்காததால் வழக்கு பதியவில்லை என்றால் ஆமாம். குணவதி இறந்த பின்னிட்டு எவ்வளவு நாட்கள் கழித்து என் கணவரும், சாருலதாவும் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது.

21) நான் என் கணவருடன் நீண்ட நாட்கள் கழித்து சேர்ந்து வாழ என் கணவர் சொல்லிக் கொடுத்ததன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.